# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1815/29 - 2013 ජුනි මස 21 වැනි සිකුරාදා - 2013.06.21

1815/29 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல: DS/UP/3/1/LAQ/DUNUKE.Ro/39/1

உமது இல : LD/05/2008/HW/444

அட்டபாகை - துனுகேஉல்ல வீதியை கி.மீ. 3+100 முதல் கி. மீ. 3+900 வரை விரிவுபடுத்துவதற்கு அவசியமான காணியை சுவீகரித்தல்.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை, ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சி யாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப் படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் அல்லது ஆட்சி உரிமையின் விபரம் :-**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், கந்துகர இஹல கோரளையில் மில்லகஸ்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், நில அளவை மாஅதிபரினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320232(3)03 மற்றும் 320114(1)2 இன் உடைய வரைபடத்தில் துண்டு இலக்கங்கள் முறையாக 122, 105 ஐ உடைய 0.1665 ஹெக்டயார் விசாலமான மில்லகஸ்பிடிய தோட்டம் மற்றும் கிரிவனாகொட தோட்டம் எனும் இரு காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 122: காணியின் பெயர்: “கிரிவனாகொட தோட்டம்”; விஸ்தீரணம்: 0.0653 ஹெக்டயார். உரிமை கோருபவரின் விபரம்: திரு. விஜேசிங்க பண்டார, துனுகேஉல்ல, அட்டபாகை. வரைபட இல. 320232(3)3**

**2. துண்டு இல. 105: காணியின் பெயர்: “மில்லகஸ்பிடிய தோட்டம்”; விஸ்தீரணம்: 1012 ஹெக்டயார். உரிமை கோருபவரின் விபரம்: திரு. ஏ. பீ. விஜேசேகர, மில்லகஸ்பிட்டிய, அட்டபாகை. வரைபட இல. 320114(1)2**

மேற்குறித்த காணிக்கு/ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 செப்டெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைக ளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆகஸ்ட் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

டி. காமினி முனசிங்க,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த பிரிவு.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
2013.06.19.
7 - 166

---

**காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது குறிப்பு இல: 3/1/2/8

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப் பிலக்கம்: LD/05/2006/WS/266

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பொது மக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரங்கள் :-**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில், கந்தாய கோரளையின் சிறு பிரிவில், எட்டகஹவெல என்ற கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2013.05.27 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட கு 2293 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "அஹஸ் பொக்குன வத்த" என்னும் காணியில் சுமார் 0.5894 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**1. துண்டு இல. 1: காணியின் பெயர்: "அஹஸ்பொக்குன வத்த"; விஸ்தீரணம்: 0.5894 ஹெக்டயார்.**

வடக்கு: தெதுரு ஒய; கிழக்கு: கு 574 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் 01 ஆம் காணித்துண்டு; தெற்கு: கு 574 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் 01 ஆம் காணித்துண்டு; மேற்கு: கு 1286 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் 37, 38 ஆம் காணித்துண்டுகள் மற்றும் (பிரதேச சபை பாதை). உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்: வை. எம். அநுர லால்சிறி, மொல தென்ன, பிலிமதலாவ.

மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2013, செப்டெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாவத்தகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2013, செப்டெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக்கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனைச் செய்யும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ. எம். எம். எஸ். ஏகநாயக,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

பிரதேச செயலகம்,
மாவத்தகம,
குருநாகல்,
2013.06.18.
7 - 167